# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

மானியக் கோரிக்கை எண். 18

## அறிவிப்புகள்
## 2021-2022

**ஆர்.காந்தி**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை
அமைச்சர்

# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

## 1. திருவண்ணாமலை கதர் அங்காடி கட்டடம் ரூபாய் 44 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்

திருவண்ணாமலை நகரில், திருமஞ்சன கோபுர வீதியில் தரைத்தளம் 769.40 சதுரடி மற்றும் முதல்தளம் 769.40 சதுரடி ஆக மொத்தம் 1538.80 சதுரடி கொண்ட கதர் அங்காடி கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அக்கட்டடத்தை சீரமைத்து நவீனப்படுத்துவது இன்றியமையாததாக உள்ளது. இக்கட்டடம் ரூபாய் 44 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

**2. ரூபாய் 20 இலட்சம் செலவில், கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு ரகங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்படுத்தப்படும்**

கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு ரகங்களின் சிறப்புகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி முகாம்கள் நடத்துவது, சமூக ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் பொது மக்களுக்கு விளம்பரப்படுத்துவது போன்ற பணிகள் ரூபாய் 20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.



**3. தற்பொழுது உள்ள கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியத்தினை, மறு சீரமைப்பு செய்து புத்துயிர் அளிக்கப்படும்**

2010-2011-ல், கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்த துவக்கப்பட்டதே, கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியமாகும். இவ்வாரியம் துவக்கப்பட்டதன் நோக்கத்தின்படி செயல்படாமல் செயலிழந்து இருப்பதைக் கருத்தில் கொண்டு, வாரியத்திற்கு புதிதாக உறுப்பினர்களை சேர்த்து, உறுப்பினர் அட்டை வழங்கி, அவர்களுக்கு நலத்திட்ட நிதியுதவி வழங்கிடவும், நூற்பு மற்றும் நெசவுப் பணித் தன்மைக்கேற்ப புதிய திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திடவும், புதிதாக அலுவல் சாரா உறுப்பினர்களை தேர்வு செய்து நிர்வாகக் கட்டமைப்பை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. மக்களைக் கவரும் வண்ணம், ரூபாய் 4 இலட்சம் செலவில், கிராமப் பொருட்களுக்கான புதிய மேலுறைகள் மற்றும் பட்டுப் புடவைகளுக்கான அட்டை பெட்டிகளை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்**

வாரியத்தின் சோப்பு வகைகள், தேன், ஊதுபத்தி, சாம்பிராணி மற்றும் ஜவ்வாது போன்ற கிராமப் பொருட்களுக்கான மேலுறை பெட்டிகளின் வண்ணங்கள் மற்றும் டிசைன்கள், மக்களைக் கவரும் வகையில் வண்ணக்கலவையுடன் புதிதாக வடிவமைத்து, அடைப்பான்களை (Containers) உருவாக்குவது மற்றும் புதிய வடிவமைப்புடன் கூடிய அட்டைப் பெட்டிகளை உருவாக்கி, அதனில் பட்டு புடவைகளை விற்பனை செய்வது போன்ற பணிகள் ரூபாய் 4 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.



**5. ரூபாய் 5.10 இலட்சம் செலவில், இராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம் தச்சு கருமார அலகில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து, அலுவலக அறை புதுப்பிக்கப்படும்**

இராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம் தச்சு கருமார அலகில் வாரியப் பணியாளர்கள், தொழிலாளர்கள் பயன்பாட்டிற்கு அலுவலக அறையினை புதுப்பித்தல் மற்றும் தண்ணீர் தேவைக்கென புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்தல் போன்ற பணிகள் ரூபாய் 5.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**6. ரூபாய் 15 இலட்சம் செலவில், கதர் பட்டு நெசவாளர்களுக்கு, நவீன முறையில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி, திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்**

மாறிவரும் நுகர்வு கலாச்சாரத்தினை கருத்தில் கொண்டு பாரம்பரியம் மாறாமல் கதர் பட்டு உற்பத்தியில் புதுமையான வடிவமைப்புகளை வரைகலை மற்றும் ஜவுளி வடிவமைப்பு மென்பொருள் (Photoshop and Textile Design Software) ஆகியவற்றின் மூலம் உருவாக்கி, அது குறித்து திண்டுக்கல் மாவட்டம் – நரிக்கல்பட்டி, சேலம் மாவட்டம் – காட்டம்பட்டி மற்றும் திருப்பூர் மாவட்டம் – அவிநாசி ஆகிய இடங்களிலுள்ள 90 பட்டு நெசவாளர்களுக்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.



**7. ரூபாய் 16 இலட்சம் செலவில், ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – திருக்கழுக்குன்றம் ஆகிய இரு சோப்பு அலகுகளில் தானியங்கி சோப்பு வெட்டும் இயந்திரங்கள் நிறுவப்படும்.**

மக்களைக் கவரும் வகையிலான தோற்றமுடைய சோப்புகளை உற்பத்தி செய்திடவும், உற்பத்தித் திறனை அதிகரித்திட, இரண்டு தானியங்கி சோப்பு வெட்டும் இயந்திரங்களை தலா ரூபாய் 8 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 16 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து, ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி சோப்பு அலகிலும், செங்கல்பட்டு மாவட்டம் – திருக்கழுக்குன்றம் சோப்பு அலகிலும் நிறுவப்படும்.

தமிழ்நாடு பனை பொருள்
வளர்ச்சி வாரியம்

**8. ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில், திருநெல்வேலி – தூத்துக்குடி மாவட்ட பனை பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளன வளாகத்தில், பனை வெல்லம் உற்பத்தி செய்திட பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்படும்**

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பனைத் தொழிலாளர்கள் பயனடையும் வகையில், பதநீரை கொண்டு, நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, திருநெல்வேலி – தூத்துக்குடி மாவட்ட பனை பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளன அலுவலக வளாகத்தில் சுத்தமான பனைவெல்லம் உற்பத்தி செய்திட பொது பயன்பாட்டு மையம் (COMMON FACILITY CENTRE) ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**9. ரூபாய் 15 இலட்சம் செலவில், பனை பொருட்களை பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக சமூக ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்படுத்தப்படும்**

பனை வெல்லம், பனங் கற்கண்டு, சுக்குக் காபி தூள், பனஞ்சீனி மற்றும் பனங் கற்கண்டு மிட்டாய் போன்ற பொருட்களின் சிறப்புகளை பொதுமக்கள் அறிந்து கொள்ள, மாநிலத்திலுள்ள முக்கிய நகரங்களில் விழிப்புணர்வு மற்றும் கண்காட்சி முகாம்கள் நடத்துவது, சமூக ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் தொலைக்காட்சிகள் மூலம் பொது மக்களுக்கு விளம்பரப்படுத்துவது போன்ற பணிகள் ரூபாய் 15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.



**10. ரூபாய் 16.50 இலட்சம் மதிப்பீட்டில், பனை பொருட்களை நவீன முறையில் பேக்கிங் செய்து, விற்பனை செய்திட புதிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் கொள்முதல் செய்து நிறுவப்படும்**

பனை பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகம் ஏற்பட்டுள்ளதோடு, தேவைகளும் அதிகரித்துள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு, பனஞ்சர்க்கரை, பனை வெல்லத்தூள் மற்றும் பனங்கிழங்கு தூள் போன்ற பனை பொருட்களை கொள்முதல் செய்து சந்தைப்படுத்திட சென்னை–எழும்பூர் மற்றும் கடலூர் ஆகிய இரு இடங்களில், மக்களைக் கவரும் வகையில் அழகிய வடிவமைப்புடன் கூடிய சிறிய பைகளில் (Standing Pouch & Sachet) பனைப் பொருட்களை அடைத்து, விற்பனை செய்யத் தேவையான நவீன இயந்திரங்கள் ரூபாய் 16.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

**ஆர்.காந்தி**

கைத்தறி மற்றும் துணிநூல் துறை

அமைச்சர்